

# சைவம்

குருநாகல் சைவ மகா சபை
வெளியீடு

அறுசுவை உணவுக்கு

அனைவரும் விரும்பும் இடம்

# பவளம்ஸ் லொட்ஜ்

கண்டி ரோட், குருநாகல்.

உரிமையாளர்: K. R பரமநாதன்

---

கட்டிடத் தேவைகளுக்கு வேண்டிய

சகல பொருட்களும்

கிடைக்குமிடம்

# கண்டி ஹாட்வெயர்ஸ்

பசார் வீதி, குருநாகல்.

உரிமையாளர்: அ. முத்துசாமி

உ

சிவமயம்

A. KUMARATHASAN
49 KALAIMAGAL ROAD
ARIYALAI
JAFFNA

“ மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

# சைவம்



# நாவலர் விழா
## சிறப்பு மலர்

29-11-75

குருநாகல் சைவ மகா சபை

ஸ்தாபிதம் 1930

உ

## திருச்சிற்றம்பலம்

### தேவாரம்

ஒன்றியிருந்து நினைமின்கள் உந்தமக்கு ஊனமில்லை
கன்றிய காலனைக் காலாற் கடிந்தான் அடியவர்க்காச்
சென்று தொழுமின்கள் தில்லையுட் சிற்றம்பலத்து நட்டம்
என்று வந்தாய் என்னும் எம்பெருமான் தன்றிருக்குறிப்பே.

### திருவாசகம்

நல்கா தொழியான் நமக்கென்றுன் நாமம் பிதற்றி நயனநீர்
மல்கா வாழ்த்தா வாய்குழறா வணங்கா மனத்தால் நினைந்துருகிப்
பல்கா லுன்னைப் பாவித்துப் பரவிப் பொன்னம் பலமென்றே
ஒல்கா நிற்கும் உயிர்க்கிரங்கி அருளாய் என்னை உடையானே.

### திருவிசைப்பா

நீறணி பவளக் குன்றமே நின்ற நெற்றிக்கண் ணுடையதோர் நெருப்பே
வேறணி புவன போகமே யோக வெள்ளமே மேருவில் வீரா
ஆறணி சடையெம் அற்புதக் கூத்தா அம்பொன்செய் அம்பலத் தரசே
ஏறணி கொடியெம் மீசனே உன்னைத் தொண்டனேன் இசையுமா றிசையே.

### திருப்பல்லாண்டு

மன்னுக தில்லை வளர்கநம் பக்தர்கள் வஞ்சகர் போயகலப்
பொன்னின்செய் மண்டபத் துள்ளேபுகுந்து புவனமெல் லாம்விளங்க
அன்னநடை மடவாள் உமைகோன் அடியோங்கட் கருள்புரிந்து
பின்னைப் பிறவி அறுக்க நெறிதந்த பித்தர்க்கே பல்லாண்டு கூறுதுமே.

### புராணம்

ஐந்துபே ரறிவும் கண்களே கொள்ள அளப்பரும் கரணங்கள் நான்கும்
சிந்தையே யாக குணமொரு மூன்றும் திருந்து சாத்துவிகமே யாக
இந்துவாழ் சடையான் ஆடுமா னந்த எல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்த பேரின்ப வெள்ளத்துள் திளைத்து மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்தார்,

உ

# பிரார்த்தனை உரை

"நாவலர் சீவனத்துக்கு இறங்காதவர்" என்று ஒருசமயம் தத்துவ ஞான சாதகர் ஒருவர் கூறக் கேட்டதுண்டு.

அப்பொழுது,

"உண்டிருந்து வாழ்வதற்கே உரைக்கின்றீர் உரையீரே" என்று பாரதத்தில் வரும் சாத்தகியின் கூற்றுத் தோன்றி மறைந்தது.

"நீர்க்குமிழிபோல நிலையில்லாததாகிய இந்தச் சரீரத்துக்கு ஓர் தீது வருமெனினும் வருக; நிலையுள்ளதாகிய ஆன்ம இலாபத்தின் பொருட்டு பிராணத்தியாகம் பண்ணியும், சைவ ஸ்தாபனம் பண்ணுதலே அத்தியாவசியகம். நாம் காத்தல் வேண்டுமென அவாவும் இச்சரீரத்தை நாம் பெற்றது முத்திபெறும்பொருட்டன்றோ? சிவ தூஷணம் முதலிய அதிபாதகங்களைப் பரிகரித்தற் பொருட்டுச் சரீரத்தை விடுத்தவர் முத்தி பெறுதல் சாத்தியமென்பது சிவசாத்திரங்களாலே சாதிக்கப்பட்டதன்றோ? அங்ஙனமாதலின், நாம் சிவதூஷணம் முதலியவற்றைப் பரிகரிக்குங்கால் ஒரோ வழி வரற்பாலதாகிய சரீர நாசத்தை ஏற்றுக்கோடலினாலே முத்தி பெறுவோமென்பது சாத்தியமாமே. ஆமெனில், முத்தியாகிய சாத்தியம் சித்தித்த வழி இச்சரீரமாகிய சாதனம் இருந்தென்! ஒழிந்தென்!" எனச் 'சைவ தூஷண பரிகார' முகப்பில் வருகின்ற நாவலர்பெருமானின் உயிர்ப்பான வாக்குக்கள் உள்ளத்தை உருக்கின.

நாவலர் பெருமான் வாழ்ந்த உலகம், "மேன்மைகொள் சைவநீதி"

'சைவம்' வளர்க்கும் குருநாகல் சைவ மகாசபை எடுக்கும் 'நாவலர் விழா', நாவலர் பெருமான் வாழ்ந்த 'நீதி உலகை'ப் புலப்படுத்தி வைப்பதாக என வேண்டுதல் செய்து திருவருளைப் பிரார்த்திப்போமாக!

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை
திருநெல்வேலி.

17-11-75

# ஆசியுரைகள்

"Saiva Maha Saba" is a temple. What is there to write or talk about a temple Be silent and worship.
May God bless us all.

Swami Sandananda

---

"குருநாகல் சைவ மகா சபை" சென்ற 46 ஆண்டுகளாக சைவத் திற்கும், தமிழுக்கும் ஆற்றிவரும் சேவை போற்றுதற்குரியது. அதன் சமய சமூக சேவை மேலும் விருத்தியடைய இறையருளைப் பிரார்த்தித்து ஆசீர் வதிக்கின்றோம்.

"மேன்மை கொள் சைவநீதி
விளங்குக உலகமெல்லாம்"

நல்லை ஆதீனம்,
நல்லூர்.

ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிநாதத் தம்பிரான்
ஸ்வாமிகள்

---

இலங்கைமணித் தீவகத்தில் குருநாகல் எனும்பதியில் இருக்கும் சைவர்
துலங்குதமிழ் மொழிபேசும் அன்பரெலாந் தமிழ்வளர்க்க தூய சைவம்
நலங்கெழுமும் படிவளர்க்கச் சைவமகா சபையென்று நாட்டில் பல்லாண்
டியங்கவைத்தார்; இங்கின்று யானெய்தி நாவலர்சீர் இசைத்தேன் நன்றே

பக்தியுடன் பரிந்தச் சபைக்காக ஓரில்லம் பாங்கிற் கட்டி
நத்தியருள் பெறுதற்காக் கடவுளர்தம் பூசைகளை நடாத்துகின்றார்;
ஒத்தமனத் துடன்சைவப் பிரசங்கம் பலபலவும் உகுத்துச் செய்தே
பெத்தியதொண் டியற்றுகின்றார் இவர்தகைமை இன்றுளத்தில்
வியந்தேன் அம்மா

ஒழுக்கம்வளர் தாச்சிறுவர் தமக்குநல் பள்ளியொன்றை ஓங்கச் செய்தார்
வழுக்கிலதாம் சிவத்தொண்டை ஓந்துகின்றார்; எம்பெருமான் மாட்டே பக்தி
செழிக்கும்வகை செய்கின்றார்; வடிவேலன் திருவருளால் சீரார் இந்த
விருப்புமுடைத் திருச்சைவ மகாசபைதான் பல்லாண்டு விளங்கி வாழி.

கி. வ. ஜகந்நாதன்

---

"குருநாகல் சைவ மகா சபை"யின் சைவப் பணி செழித்தோங்குக. குன்றாத வளமையும், சீரிய சிறப்பும் பெற்று நிலைக்க எமது வாழ்த்துக்கள்.

பல்கலைக் கழகம்,
பேராதனை.

பேராசிரியர் சு. வித்தியானந்தன்

உ
சிவமயம்

# வாழ்த்துச் செய்தி

குருநாகல் சைவ மகாசபை பல ஆண்டுகளாக சைவத்துக்கும் தமிழுக்கும் அரிய தொண்டாற்றி வருவது யாவரும் அறிந்ததே. அறிஞர் பலர் இச்சபையின் சார்பில் சபையின் சமய விழாக்களில் பங்குபற்றி சொற்பெருக்காற்றியும் அறிவுரை வழங்கியும் சிறப்பித்திருக்கின்றனர். அங்குவாழ் சைவமக்கள் தங்கள் சமயக் கொள்கைகளையும் சமயச் சடங்குகளையும் சமய விரதானுஷ்டானங்களையும் தொடர்ந்து மேற்கொண்டு சமயம் வளர்ப்பதற்கு அரும்பெரும் சேவை செய்து வருகின்றனர்.

அதேசமயத்தில் தமிழ் வளர்ச்சியையும் இச்சபையினர் பெரிதும் கவனித்து வருகின்றனர்.

சைவமும் தமிழும் வேறாகப் பிரிக்க முடியாத தொடர்புள்ளவை. ஆதியில் எல்லாத் தமிழர்களும் சைவ சமயிகளாகவே இருந்தனர். மிகத் தொன்மையான சமயம் சைவசமயமே அது தமிழன் கண்டதோர் அரும்பெரும் பொருளாகும். சைவசித்தாந்தமாக இன்று பல அரிய நூல்களைக் கொண்டுள்ளது சைவசமயம்

காலஞ் செல்லச் செல்ல பல்வேறு சமயங்களைத் தமிழர் சிலர் தழுவினர். எச்சமயத்தில் புகுந்தாலும் தமிழர்கள் தங்கள் மொழியாகிய தமிழைப் பாதுகாத்து வந்தனர். பல கிறீஸ்தவ முஸ்லீம் அறிஞர்கள், புலவர்கள் பல நூல்கள் தமிழில் இயற்றி இருக்கின்றனர்.

அது நிற்க, சைவசமயத்தவராகிய தமிழர் தங்கள் மொழியை பொன்போல் போற்றி வளர்த்தனர். சைவசித்தாந்த சாத்திரம் பதினான்கும், தேவார திருவாசக முதலிய திருமுறைகளும் இன்னும் பல பல சைவசமயத்தின் அரிய தமிழ் நூல்கள்.

எனவே சைவமும் தமிழும் ஒருங்கே சைவத்தமிழ் மக்களே வளர்த்தனர். சைவ சமயிகள் அந்த வழியிலே நின்று பணியாற்றும் குருநாகல் சைவ மகாசபையினர் இவ்வாண்டு நாவலர் விழாவோடு தமிழுக்கென முத்தமிழ் விழா எடுக்கின்றனர். இயல் இசை நாடகம் என்று கூறப்படும் முப்பிரிவாக உள்ள தமிழின் முப்பகுதியையும் போற்றி வளர்த்தலே நோக்கமாகும்.

நாவலர் பெருமானுக்கு விழாவெடுக்கும் சைவ மகாசபையினரைப் பெரிதும் போற்றவேண்டும். நாவலர் பெருமான் பிறந்திலரேல் சைவம் எங்கே தமிழ் எங்கே. கிறிஸ்தவ சமயிகளாற் தாக்கப்பட்டு அழிந்து போகும் நிலையில் உள்ள சைவ சமயத்திற்கும் புத்துயிர் கொடுத்த பெருமான் நாவலர் அவர்களே. நாவலர் பெருமான் முதன் முதலாக மேடைப் பிரசங்க வாயிலாகச் சைவ மக்களுக்கு அறிவுரை புகட்டியும் தமிழ் வசன நடையில் பல நூல்களை எழுதியும் மொழிபெயர்த்தும், அதோடமையாது சைவப் பிள்ளைகளுக்கென சிதம்பரத்திலும் வண்ணார்பண்ணையிலும் சைவவித்தியாசாலைகளை உண்டுபண்ணியும், அச்சியந்திரசாலைகளை நிறுவியும் தமிழ் நூல்களைப் பதிப்பித்தும் அரும்

பெருந் தொண்டாற்றிச் சைவத்தையும் தமிழையும் இருகண்களாகப் போற்றிப் பாதுகாத்து வளர்த்தார். அன்னாரைச் சைவமக்கள், தமிழ் மக்கள் ஒருபோதும் மறக்கமுடியாது. குருநாகல் சைவமகாசபையினர் அப்பெருமானுக்கு 29—11—75ல் அன்று பெருவிழா எடுக்கின்றனர். அவ்விழாவையொட்டி ''சைவம்'' சிறப்பு மலரும் வெளியிடுகின்றனர். எல்லோரும் வரவேற்க வேண்டிய விழா.

அச்சபையினர் எடுக்கும் விழா பெருவிழாவாக மிளிர்ந்து பொலிவு பெற்றுச் சிறப்படைய வேண்டும் என்று சைவபரிபாலன சபையின் சார்பாக எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றேன். அவ்விறைவன் மேற்படி சைவமகா சபையினர் தொடர்ந்து தம் சைவப் பணியையும் தமிழ்ப் பணியையும் ஏனைய பணிகளையும் செவ்வனே புரிவதற்கு அருள்புரிய வேண்டுமென்றும் அப்பெருமானை வழுத்துகின்றேன்.

''வான்முகில் வளாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம''

**திரு. த. சோமசுந்தரம் அவர்கள்**
சைவ பரிபாலனசபைத் தலைவர்,
(தலைவர்: அனைத்திலங்கைச் சைவ மன்றம், நாவலர் தருமப் பாதுகாப்புச் சபை)

---

சைவந் தமிழ்மொழி ஓங்க — இங்கு
தங்கு தமிழரின் தன்மானம் ஓங்க
உய்யும் நெறிபல கண்டு — உயர்
உத்தமர் அறிஞர்கள் சான்றோர்கள் கூடி
சைவ மகாசபை கண்டனர் — இதன்
தகைமை பெரிதென்று சாற்றுதல் நன்று
தெய்வ அருள் மிகச்சேரும் — திசை
தோறும் இதன்பணி சிறப்புற ஓங்கும்
ஐயமில்லை இக்குருநாகலை நகர் — இந்த
அன்பர் தொண்டாலே பல்லாண்டு வாழி!

**கவிஞர் நயினைநாதன்**

# தலைவர் முன்னுரை

மூன்று ஆண்டிற்குப் பின்பு மீண்டும் குருநாகல் சைவ மகாசபையின் ஆண்டுமலர் ''சைவம்'' வெளிவருகின்றது மலரைத் தயாரிப்பதற்கு வேண்டிய பல உபகரணங் களின் விலையேற்றமே இதற்கு முக்கிய காரண மாக இருந்தது

இவ்வருடம் நாவலர் பெருமானின் நினைவு தினத்தை முன்னிட்டும் அவர்வழி நின்று அரும்பெரும் தொண்டாற்றும் சைவப் பெரியார்களிருவரின் சேவையைப் பாராட்டியும் நன்றி கூறும் பொருட்டு, இச் சிறுமலரை சமர்ப்பிக்கின்றோம்.

சைவத்திற்கும் தமிழுக்கும் இரு கண்க ளென. வேதநெறி தழைத்தோங்க, மிகு சைவத்துறை விளங்க. வாரி வழங்கும் பாரி எங்கள் சைவநெறிக்காவலர் உயர்திரு. க. கனகராசா அவர்கள். அன்னாரின் ஆசைக் கோ அளவில்லை அள்ளி அள்ளிக் கொடுக்க வேண்டுமென்பது அவரின் பேரவா. அவ ரின் செல்வம் மக்களை நல்வழிப்படுத்தி சமய நெறியில் நிற்க உதவுகின்றது

பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக் குட்டி அவர்கள், மங்கையற்கரசியார், திலக வதியார் போன்ற பெண்மணிகளின் வரிசை யில் நின்று தமது வாழ்க்கையை சைவத்திற் கும் தமிழுக்கும் அர்ப்பணித்து, தமிழ் நாடு முதல் மலேசியா ஈறுகச் சென்று பிரசங்கங் கள் செய்து மக்களை ஈடேற்றுகின்றார்கள்.

இவர்கள் இருவரின் சேவையைப் பாராட்ட சைவப் பெருமக்கள் பலர் இலங் கையின் பல பாகங்களிலிருந்து வந்து இன்று குருநாகல் சைவ மகாசபை மண்டபத்தில் கூடியிருக்கின்றனர். இப்பெரியோர்கள் எல் லோரையும் அன்புடனும், உவகையுடனும் வரவழைத்து, அரன்நாமமே ஓங்குக, இன்பமே சூழ்க, எல்லோரும் வாழ்க என்று வாழ்த்தி சைவமகாசபையின் சார்பில் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

வணக்கம்

டாக்டர் ஆ. சுப்பிரமணியம்
தலைவர்

---

# செயலாளர் அறிக்கை

குருநாகல் சைவ மகா சபை கடந்த ஈராண்டுகளில் சைவத்திற்கும் தமி ழுக்கும் செய்துள்ள சேவைகளில் சிலவற்றையேனும் நாவலர் விழாவிலன்று வெளியிடப்படும் ''சைவம்'' சிறப்பு மலர் மூலம் அறியத் தருவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

வருடந்தோறும் வெளியிடப்பட்டு வந்த ''சைவம்'' மலர் கடந்த மூன்று ஆண்டுகளாக வெளியிடப்படாமைக்கு முக்கிய காரணம் அச்சிடுவதற்குரிய பொருட்களின் விலையுயர்வேயாம். பொருளாதாரத் தாக்கம் மக்களைப் பாடாய்ப் படுத்தும் இக்காலத்திலும் இம்மலரை வெளியிடப் பொருளுதவி புரிந்த அன்பர் களது பண்பே பண்பு. அவர்களது ஊக்கமும் ஒத்துழைப்பும் இம்மலர் வெளியிடு வதுடன் அமையாது இவ்வாண்டு நாவலர் விழாவை முத்தமிழ் விழாவாக எடுக் கவும் ஏதுவாயிற்று. அதிலும் நவராத்திரி விழாக்களை விமரிசையாகக் கொண் டாடி முடித்து ஒரு மாதத்திற்குள் இவ்வாறனதொரு பெரு விழா எடுக்கச் சகல வகையிலும் ஒத்துழைத்த அன்பர்களது பேரபிமானத்தைப் பாராட்டாதிருக்க முடியாது.

## முத்தமிழ் விழா

எமது சபையின் முக்கிய நோக்கங்கள் சைவத்தையும், தமிழையும் பேணிப் பாதுகாப்பது, மக்களிடத்து சமய அறிவையும் தமிழறிவையும் பரப்புவது, தமிழ் மொழி இலக்கிய ஆய்வுக்கு வாய்ப்பளிப்பது பொதுவாக எல்லா சைவ மக்களிடத்தும் குறிப்பாக இளஞ் சமுதாயத்தினரிடத்தும் பண்ணோடிசைந்த திருமுறை ஆட்சியைப் பெருக்குவது கலை, கலாச்சாரத்தைப் பேணி வளர்த்து ஊக்கமளிப்பது என்பனவாம். இவற்றை ஓரளவேனும் நிறைவேற்றும் பொருட்டு சைவத்திற்கும் தமிழுக்கும் அருந் தொண்டாற்றிய நல்லைநகர் நாவலரின் நினைவு தினத்தை கருத்தரங்கு, கவியரங்கு, இசையரங்கு, நடன அரங்கு, நாடக அரங்கு முதலியன கொண்ட பெருவிழாவாக இவ்வாண்டு நடாத்துகிறோம்.

## விழாக்கள்

வழமைபோல் இவ்வாண்டும் நவராத்திரி பூசைகளின்போது ஈழத்தின் தலை சிறந்த அறிஞர்களின் நல்லுரைகளும், கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன அவ்வாறே நால்வர் குருபூசைகளும், நாவலர் - பாரதியார் - வள்ளுவர் - சேக்கிழார் - விபுலானந்தர் தினங்களும் சிறப்புச் சொற்பொழிவுகளுடன் அமைந்திருந்தன. இவ்விழாக்களில் பங்குபற்றிய அறிஞர் வரிசையைப் பிறிதொரு பக்கத்திற் காண்க.

## பாராட்டு

புலவர்களையும் புரவலர்களையும் பாராட்டுதல் தொன்றுதொட்டு நிலவிவரும் எமது பண்டைத் தமிழர் பண்பாட்டின் பாரம்பரியமாகும். அம்பரபையொட்டி இவ்வாண்டு நடைபெறும் நாவலர் விழாவையொட்டிய முத்தமிழ் விழாவில் ஈழத்தில் மட்டுமன்றி ஈழங்கடந்தும் சிங்கப்பூர், மலேசியா, தமிழ்நாடு போன்ற தமிழ் கூறும் நல்லுலகம் எங்கணும் சென்று சமயப் பிரசாரம் செய்துவரும் திருவாசகக் கொண்டல் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களையும், சமய சமூக நல்வாழ்வுக்கு அயராது உழைப்பதுடன், தாம் அறவழித் தேடியவற்றை வரையாது வழங்கி கடையேழு வள்ளல்களில் வாரிசோ என விளங்கி 'எத்தனை எண்ணமோ அத்தனை தருமங்கள்' செய்துவரும் யாழ்ப்பாணம் மில்க்வைற் சவர்க்காரத் தொழிலக அதிபர், சிவநெறிக்காவலர், உயர்திரு. க. கனகராசா J. P. அவர்களையும் பாராட்டிக் கௌரவிக்கின்றோம்.

## நடராஜர் விக்கிரகம்

சபையின் பிரார்த்தனை மண்டபத்தில் கடந்த பல ஆண்டுகளாகத் திருவுருவப் படங்களையே வைத்துப் பூசை செய்துவந்துள்ளோம். கடந்த ஆண்டு ஸ்ரீ அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப்பெருமானது திருவிக்கிரகம் வைக்கப்பட்டு, பிரதி வெள்ளிக்கிழமைகளிலும் விசேட தினங்களிலும் அர்ச்சகரால் பூசை செய்யப்பட்டு வருகிறது. அர்ச்சகர் செலவை எமது சபையின் உப தலைவர்களுள் ஒருவரான திரு. க. சிவஞானசுந்தரம் அவர்கள் உபகரிக்கின்றார்கள். ஸ்ரீ நடராசப்பெருமானை ஸ்தாபித்ததன் நினைவாக இம்மலர் அட்டை அந்த ஆடல் வல்லானின் அழகிய திருவுருவத்தைத் தாங்கி நிற்கிறது.

## புதிய கட்டிடம்

சபையின் சமையலறையும், சாப்பாட்டறையும் புதிதாகக் கட்டப்பட்டதுடன் மண்டப மேடையும் திருத்தப்பட்டு அதற்கெனப் புதிதாக ஒரு கதவும் பொருத்தப் பட்டது.

## வேண்டுகோள்

1930-ஆம் ஆண்டு நிறுவப்பட்ட இச்சபைக்கென நிரந்தரமான ஒரு கட்டிடத்தை அக்காலத்திருந்த தமிழ்ப் பெருமக்கள் வாங்கி உதவினர். பின்னர் 1950 இல் நீதிபதி ஸ்பென்சர் இராசரத்தினம், திரு. ச. அம்பலவாணர், திரு. க. திருஞானசம்பந்தர், திரு. வே. ஆழ்வாப்பிள்ளை போன்ற பல சைவப்பெருமக்களின் அயரா முயற்சியினால் பிரார்த்தனை மண்டபம் கட்டப்பட்டது. அக்கட்டிடத்திற்கும் வயது இருபத்தைந்து முடிவுற்றமையால் அதன் தகரக் கூரை பழுதடைந்த நிலையில் உள்ளது. அதனை முற்றாகத் திருத்திப் புதிதாகச் 'சீற்' அடிப்பதற்குக் கணிசமான தொகை தேவைப்படுகின்றது. நாற்பத்தாறுண்டுகளாகத் தன்னாலான சேவையை ஆற்றி வருவதும், குருநாகல் பிராந்தியத்தின் பழமையான ஒரே சைவ ஸ்தாபனமுமான எமது சபையின் நிரந்தரக் கட்டிடத்தைப் பேணிப் பாதுகாத்து நல்ல நிலையில் வைத்திருப்பது பொதுவாகத் தமிழ் மக்களதும், சிறப்பாகச் சைவப் பெருமக்களதும் தலையாய கடனாகும். எனவே வெகுவிரைவில் அமைக்கப்படவிருக்கும் "குருநாகல் சைவ மகா சபைக் கட்டிடத் திருத்த வேலைக்குழு"வுக்குத் தம்மாலியன்ற பொருள் உதவி புரியுமாறு சைவத்தின் பேராலும் தமிழன்னையின் பேராலும் பணிவன்புடன் வேண்டுகின்றோம்.

## நன்றி

இவ்வாண்டு நாவலர் விழாவினை நற்பெருந் தமிழ்விழாவாக - முத்தமிழ் வல்ல வித்தகர்கள் பலரும் பங்குகொள்ளும் பெருவிழாவாகக் கொண்டாட ஒத்துழைப்பு நல்கிய சகல செயற்குழு அங்கத்தினர்களுக்கும், நிதி உதவி அளித்த அன்பர்களுக்கும், எமது வேண்டுகோளுக்கிணங்கி எமது முத்தமிழ் விழாவிலும், ஏனைய விழாக்களிலும் பங்குபற்றிச் சிறப்பித்த சகல அறிஞர்களுக்கும், கலைஞர்களுக்கும் தத்தம் உபயங்களை இன் முகத்தோடு ஏற்றுச் சிறப்பாக நடாத்திவரும் சகல உபயகாரர்களுக்கும், தங்களைப் பாராட்டிக் கௌரவிக்க வாய்ப்பளித்த செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களுக்கும், உயர்திரு. க. கனகராசா அவர்களுக்கும், 'சைவம்' சிறப்பு மலருக்கு ஆசியுரை, கட்டுரை, கவிதை முதலியன உதவிய அறிஞர்களுக்கும், இம்மலரை அழகுற அச்சிட்டுதவிய யாழ்ப்பாணம் ஸ்ரீ பார்வதி அச்சகத்தாருக்கும் எமது உளங்கனிந்த நன்றி.

மு. இராமலிங்கம்
*கௌரவ செயலாளர்*

உ

29-11-75 சனிக்கிழமை

குருநாகல் சைவ மகா சபையில் நடைபெற்ற

முத்தமிழ் விழாவில்

சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின்

சேவைநலம் பாராட்டி வாசித்தளித்த

# பாராட்டுப் பத்திரம்

## நான்மணி மாலை

### நேரிசை வெண்பா

அன்பும் அறிவும் அழகும் அடக்கமும்
இன்பத் தமிழ்சொரியும் ஏற்றமும் — நன்கிணைந்த
பண்டிதை சீர்த் தங்கம்மா பல்லாண்டு வாழியரோ
எண்டிசையும் ஏத்த இனிது.

### கட்டளைக் கலித்துறை

இனிதே தினம்துர்க்கை அம்மை இருபதம் எண்ணியருட்
கனியே சுவைத்துயிர் உய்யும் நெறியுரைக் கன்னந்தரும்
வனிதா மணியே வருக குருநாகல் மாநகர்நின்
நனிநயன் நன்றியும் நாடொறும் போற்றும் நலங்கலந்தே!

### விருத்தம்

கலந்தடியார் கூட்டத்துக் காந்தச் செஞ்சொற்
கருத்தொளிரச் செவிகுளிரக் கண்ணீர்வார
தலந்தெரிந்து ஆய்ந்துரைக்கும் நங்காய்! எங்கள்
நாடுபுரி பெருந்தவமே! நாவின் பாவாய்!
புலந்தெரிந்த பழம்புலவர் போற்றி ஏற்றப்
பொன்மொழிகள் புரிந்தெடுத்துப் புதிதாய் நல்கும்
வலம்மிகுந்த மங்கைநல்லாய்! வாழி ஊழி
மரபுவழி வந்ததமிழ் மாரி பெய்தே!

### அகவற்பா

மாரி பெய்ய மறப்பினும் வளமலி
சீரார் அளவையூர்ச் செல்வி தங்கம்மா!
பேரார் தெல்லிப் பளையமர் பெரும்பெயர்க்
காரார் கன்னி கருணையம் மாரியால்
தெய்வச் செந்தமிழ்ச் சொன்மழை பொழிந்து
சைவப் பெரும்பயிர் தழைத்திடக் காக்கும்
நங்கையே, வாழ்வினை நற்பணிக் களித்த
மங்கையர்க் கரசியே! வாழிநின் திருப்பணி!
அரனடி தலைக்கொண்(டு) அல்லும் பகலும்

பரந்தெழு பாரெலாம் பறந்தும் திரிந்தும்
உண்ணா(து) உறங்கா(து) ஓய்வுங் கொள்ளாது
தண்ணார் தமிழ்ச்சுவை தான்நுகர்ந் தூட்டியும்
பொய்கண் டவர்க்குப் புலப்படா அத்துவித
மெய்கண்ட நாதன் விளம்பிய போதத்
தேனெடுத் தெம்மனோர் தித்திக் கும்வகை
கானங் கலந்தே கன்மனங் கரைய
விரித்தும் தொகுத்தும் விளக்கியும் உருக்கும்
ஒருத்தி நீயே, உயர்நா வரசியே!
வாழிநின் நாவளம்! வளர்கநின் வாணாள்!
ஊழிதோ றூழி உறுபுகழ் நிறுத்திய
சித்தாந்த வித்தகி, சிவத்தமிழ்ச் செல்வி,
உத்தமி, திருமுறை உணர்தமிழ்ச் செல்வி,
கங்கைகள் பாயக் கவின்மலை இலங்கப்
பொங்கும் அமுத ஓடைகள் பொலியத்
தெங்கும் கமுகும் செந்நெலும் கன்னலும்
எங்கணும் குலுங்க எழில்மலி குருநாகல்
வர்ழ்தமிழ் மக்கள் மன்னுயிர் ஓங்கி
வாழ்வுற அமைத்த சைவ மகாசபை
பல்லாண்(டு) இயற்றும் பணிகளுள் நன்றென
நல்லோய் நின்அது நலம்பா ராட்ட
விளைந்த விழாவிலெம் உள்ளம் விறல்கொள
அழைப்பினை ஏற்றே அகமகிழ் வருகை
தந்தநல் லணங்கே! தையலர் திலகமே!
முந்துசிவ நெறிக்கும் மூவாத் தமிழுக்கும்
தொண்டுகள் புரிதரு விறலி
கொண்டனை கூத்தன் இன்ப அன்பே!

[ஆக்கம்: வித்துவான் சி. ஆறுமுகம்]

உ

29-11-75 சனிக்கிழமை

திருநாகல் சைவ மகா சபையில் நடைபெற்ற

முத்தமிழ் விழாவில்

# சிவநெறிக் காவலர் உயர்திரு. க. கனகராசா J. P. அவர்களின்

சேவைநலம் பாராட்டி வாசித்தளித்த

# பாராட்டுப் பத்திரம்

வெண்பா

செம்மனத்துச் செல்வனுயர் சீர்க்கனக ராசவள்ளல்
எம்மவர் பெற்ற இருஞ்செல்வம் — மெய்ம்மையும்
அன்பும் பணிவும் அமைந்த குணக்குன்றம்
இன்பமுற வாழி இனிது.

கட்டளைக் கலித்துறை

இனிக்கும் மொழியினை இல்லையென் ஞதாய்! இமைப்பொழுதுள்
கனிக்கா வுலகம் வலம்வந்த கந்தன் கழல் பணிந்தே
நினைக்கும் கருமம் நெறியோ டியற்றும் நியமமுள்ளோய்!
உனக்கும் ஒருவர் இணையுள ரோகொடைக்(கு) உத்தமனே!

விருத்தம்

உத்தமனை ஊரூராய்ச் சென்று செல்வம்
உவகையொடும் ஈந்தீந்து ஊக்கி நிற்கும்
சித்தமுயர் சிவதர்ம வள்ளல் தன்னைச்
செந்தமிழர் திறம்பேணிச் செயல்கள் ஆற்றும்
வித்தகனைச் சிந்தனைக்கு விருந்தா ஞனை
வேண்டுவரர் வேண்டுவன விரும்பி வீசும்
பத்திநெறி கைவந்த பண்பி ஞனைப்
பாராட்டும் பேறுபெற்ருேம் பயன்பெற் ருேமே!

அகவற்பா

பெற்ற பிறவிப் பெரும்பயன் உணர்ந்தே
கற்பன கற்றுக் கற்ருங்(கு) ஒழுகுவோய்!
'செய்யுந் தொழிலே சிவம்' எனத் தேர்ந்து
உய்யுந் தருமம் உவப்பொடும் புரிவோய்!
பெற்றதாய் போலப் பிறந்தநா டதனிலும்
பற்றுக் கொண்டே பழமையுட் புதுமையுள்

நல்லன ஏற்றே 'நான்பெற்ற இன்பம்'
எல்லவர் தாமும் இனிதே பெறுகென
'உள்ளும் புறம்பும்' ஒத்தே நடக்கும்
வள்ளலே! வருக, வண்டமிழ்ப் பற்றும்
சித்தாந்த சைவத் திறமிசைப் பற்றும்
பத்திசேர் அடியார் பரம்பரைப் பற்றும்
முற்றக் கொண்ட முத்தே! வாழ்க,
அற்றவர்க் கிரங்கும் அன்பனே வாழ்க
'ஈதல் இசைபட வாழ்தல்' இரண்டும்
ஊதியம் உயிர்க்கென உணர்ந்தே யவற்றை
நெஞ்சங் கொண்டோய், நினைவிலுங் கனவிலும்
அன்னங் கொடுப்பாய்! ஆறுதல் அளிப்பாய்!
வன்னப் பட்டும் மகிழ்வுறக் கொடுப்பாய்!
புத்தம் புதிய நூலாய்ச் சேலையாய்
உத்தம மரமாய் உயர்மண் வெட்டியாய்
எத்தனை எண்ணமோ அத்தனை தருமம்
வித்தகக் கனக ராச வீர
கொடுத்து மகிழுங் குலக்கொடை யாளநீ
பண்டைத் தமிழர் பரம்பரை வள்ளல்
எண்டிசை யளந்த இரும்புகழ்ப் பாரியோ?
கானக மயிலின் கலக்கங் கண்டே
மானக் கலிங்கம் மகிழ்வுடன் போர்த்த
பேகனோ? செந்தமிழ்ப் பேணி வளர்த்த
வேகப் பெண்மணி வியன்சார் ஔவையே
நீடு வாழ்கென நெல்லிப் பெருங்கனி
நாடி யளித்த நற்புகழ் அதிகனோ?
யாரென நின்னை யாம்புகழ்ந் திடுவோம்?
சீரா ளாநின் தெய்விகக் கொடையை
ஆரார் புக்ழ்ந்தார்! ஆர்புக் ழாதார்?
பண்டித மணிநின் பண்பெடுத் துரைக்கும்
ஒண்பெரும் புகழது ஒன்றே போதுமால்!
'தருமம்என் றொருபொருள் உளது' எனும் தன்மை
கரும யோகிநீ கண்டனை! கண்டனை!
ஞாலம் உணர்ந்த வள்ளுவர் நல்லுரை
காலத்தை வென்ற மூலர் மந்திரம்!
நால்வர் ஞானம், நல்லோர் சிந்தனை
சீலந் தெளிந்த செல்வர் சீர்மொழி
வேதாந்த சித்தாந்த சமரச வித்தக
மேதை தாயு மானார் வியன்மொழி,
வீர விவேகா நந்தர் விறலுரை
தீரர் காந்தி மகாத்மா தேன்மொழி,
நாவலர் நன்மொழி, பாவலர் பாரதி
ஆவலோ டளித்த அற்புதச் செஞ்சொல்
யாவும் நூல்களுள் நன்கனம் மிளிர
ஏவரும் வியப்ப இனிதாய்ப் புதிதாய்
வேகமா வழங்கும் வீர
ஏகன் அருளால் இலங்குமுன் செம்மையே.

[ஆக்கம்: வித்துவான் சி. ஆறுமுகம்]

உ

# ஐந்தாங் குரவர்

சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி

ஆரூரனில்லை புகலியர் கோனில்லை அப்பனில்லை
சீருரும் மாணிக்க வாசகனில்லை நிசையளந்த
பேருரு மாறுமுக நாவலனில்லை பின்னிங்கியார்
நீருரும் வேணியன் மார்க்கத்தைப் போதிக்கும் தீர்மையரே?

என்று உடுப்பிட்டி சிவசம்புப் புலவர் போற்றி நின்றார். சென்ற நூற்றாண்டிலே நாவலர் பெருமானை நல்லை நகர் தந்தமையால் ஈழத்துச் சைவமக்கள் பெருமை பெற்றனர். நாவலர் அவதரித்த நாடு நமது நாடு என்று நினைக்கும்போது உள்ளம் உவகை கொள்கிறது. காலத்துக்குக் காலம் இத்தகைய மாண்புடையோர் நம்மத்தியில் தோன்றுவதால்தான் உலகம் நிலைபெற்றுச் சிறப்படைகிறது.

உண்டால் அம்ம இவ்வுலகம் இந்திரர்
அமிர்தம் இயைவதாயினும் இனிதெனக்
தமியர் உண்டலுமிலரே முனிவிலர்
துஞ்சலுமிலர் பிறர் அஞ்சுவதஞ்சிப்
புகழெனின் உயிரும் கொடுக்குவர் பழியெனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர் அறிவிலர்
அன்னமாட்சி அனையராகித் தமக்கென முயலா நோன்றாட்
பிறர்க்கென முயலுநர் உண்மையானே.

என்று பாடுகிறது புறநானூறு, நாவலர் பெருமானுடைய அருள்வாழ்வு இச்செய்யுளுக்கோர் எடுத்துக்காட்டாகும். சமயகுரவர் நால்வரும் வாழ்ந்து காட்டிய வழியில் சைவத்திருநெறியைப் பின்பற்றி வாழ்ந்து நாமும் வாழவும் வழிகாட்டினார். சொற்பொழிகளாலும் கல்விப்பணி புரிந்தமையாலும் நூல்களை வெளியிட்டுப் பணிபுரிந்தமையாலும் இவருடைய சேவை போற்றுதற்குரிய பெருமையைப் பெற்றது. அப்பர் சுவாமிகள் காட்டிய நெறியில் ''தன்கடன் அடியேனையுந் தாங்குதல் என்கடன் பணிசெய்து கிடப்பதே'' என்பதற்கிணங்க் வாழ்ந்த பெருமகனார் எங்கள் நாவலர் அவர்கள். ''சிவனுண்டு பயமில்லை'' என்பது அவருடைய தாரக மந்திரம். இதனை ஜெபித்த சிறப்பினால் அஞ்சா நெஞ்சும் சத்தியவாக்கும் செயல் தூய்மையும் பெற்றார். ஞானசம்பந்தரைப் போல வேதநெறி தழைத்தோங்கவும் மிகு சைவத்துறை விளங்கவும் பூத பரம்பரை பொலியவும் பணிபுரிந்தார். திருநாவுக்கரசு சுவாமிகளைப்போல் திருத்தொண்டின் நெறி வாழப் பாடுபட்டார். சுந்தரமூர்த்தி சுவாமிகளைப்போல் தீதகன்றுலகமுய்யத் திரு அவதாரம் செய்தார். மணிவாசகப் பெருமானைப்போல் அகவிருள் நீக்கும் ஞானசூரியனாக் விளங்கினார் வருடா வருடம் குருபூசை விழாச் செய்து நாவலர் ஐயா அவர்களின் பெருமைகளையும் பணிகளையும் நினைவூட்டிக்கொள்ளும் வாய்ப்பைக் குருநாகல் சைவ மகாசபை ஏற்படுத்திவருவது மிகமிகப் பாராட்டுதற்குரியதாகும்.

''கருள் விரவுதலைக் கழிக்கும்
கண்மணியும் வெண்ணீறும்
பொருள் விரவி ஐந் தெழுத்தும்
பொருளாகக் கொண்டுவப்போன்
தெருள் விரவு சுத்த சைவ சித்தாந்தப்
பெருஞ் செல்வன்
அருள் விரவு பரவு புகழ்
ஆறுமுக நாவலனே''

# கர்ம வீரரே நல்லை நாவலர்

— கவிஞர் அரியாலையூர் வே. ஐயாத்துரை —

அருளக்கல் சேர அன்பாக்கல் செய்யும்
குருநாக்கல் சைவ குழாமே பெருநோக்காய்
பல்லாண்டு காலம் பாரிற் பயன் மேவி
நல்லாண்டு வாழ்க நயந்து.

நல்லாண்டு காலம் நயமார்ந்த சைவநெறிச்
சொல்லாண்டு சோராத தொண்டாண்டு — எல்லோரும்
போற்றும் தமிழாண்டு போதப் பொலிவாண்டு
ஏற்றம் பெறுவீ ரிதம்.

ஏற்றமார் சைவ இலக்கணமார் நாவலரை
போற்றுவதி லும்அவரின் பொன்மொழியை — சாற்றிநிதம்
பின்பற்றித் தொண்டாற்றிப் பேரார் தமிழ்காத்தே
இன்புற்று வாழ்தல் இனிது.

நிர்ம லத்தனை நெஞ்ச கத்தினில்
நிற்க வைத்தவர் நேரி டத்திலே
கர்ம வீரராய் நல்லை நாவலர்
கால மாதியாய்க் காணப் பெற்றனர்!
தர்ம மேதலை சைவ மேநிலை
சாரச் சந்ததம் சால்பு றும்பணி
நிர்வ கித்திடும் நேச ரேநெறி
நீட்டி யன்னவர் நினைவு கூருவீர்!

கர்ம வீரமே கண்ணி யம்நிறை
காரி யத்தினைக் காக்க வல்லது
சர்வ சக்தியைச் சாருஞ் சொல்லது
சத்து ருக்களைச் சாய்க்கும் வில்லது
பர்வ தத்திலே நின்று பேரொளி
பாய்ச்சிப் பாரினைப் பார்க்க நல்லது
மர்ம மற்றதோர் மாண்பு றும்வழி
மாசில் லாதநம் நாவ லர்பணி

நாவ லர்பணி நற்ற மிழக்கணி
நாமு ணர்ந்திட நாட றிந்ததே!
தீவ கத்திலும் தென்ன கத்திலும்
தேசு பெற்றநேர் சின்ன மாதியே
மேவி நிற்பதும் மேன்மை பெற்றதும்
மேலும் யாமதைப் பேணிக் கற்பதும்
ஆவி பொற்பதம் பெற்ற நாவலர்க்
கன்பு செய்வதும் ஆக்க மேதரும்

தூண்டு தல்முறை ஆண்டு செய்திடாச்
சுந்த ரப்பணி நாவ லர்பணி
தூண்டு தெங்களை யாண்டு மப்பணி
சொத்து மானதே நாவ லர்அணி
வேண்டு தல்மிகும் நல்லை தன்னிலே
வேல வன்திருக் காட்சி வீதியில்
நீண்ட நற்புகழ் பூண்ட நாவலர்
நேச மார்கணிப் புற்ற தைநினை!

---

உ

# நாவலர் காட்டிய வழி

(ஆத்மஜோதி நா. முத்தையா)

"இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது, நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்." இது நாவலர் பெருமான் எழுதிய பாலபாடம் இரண்டாம் புத்தகத்தில் உள்ள முதலாவது வசனம் ஆகும். இவ்வசனத்துள் முப்பொருள்பற்றிய சைவசித்தாந்த சாத்திரங்களின் முடிந்த முடிபும், பிறவியின் நோக்கமும், அதை அடையும் வழியும் ஆகியவைபற்றி இரத்தினச் சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளது

இந்த என்ற சுட்டு ஒவ்வொருவரும் தாந்தாம் எடுத்த சரீரத்தை உணர்த்துவதாய் அமைந்துள்ளது. நமக்கு, நாம் என்ற இரு சொற்களும், பசுக்களாகிய ஆன்மாக்களைக் குறிப்பன. கடவுள் என்ற சொல் பதியைக் குறிப்பது, ஆன்மாவின் தொழில் கடவுளை வணங்குதல் என்பதனை வணங்கி என்ற சொல் குறிக்கின்றது. பிறவியின் நோக்கமும் பயனும் முத்தி இன்பம் என்பதால் குறிப்பிட்டார்.

இன்றைய உலகில் நாம் சரீரம் என்று நினைத்து அதனைப் பூசிப்போரே அநேகர்; உடம்பின் தேவைகளைக் கவனிப்பதிலேயே மனித வாழ்வின் பெரும்பகுதி கழிந்துவிடுகின்றது. அதனால் உள்ளத்தைப் பண்படுத்த, உயிரைப்பற்றிச் சிந்திக்க, உயிருக்குள் உயிராய் இருக்கும் இறைவனைச் சிந்திக்க மனிதனுக்கு நேரமே கிடைப்பதில்லை. உடம்புக்குள் உயிர் இருப்பதுபோல உயிருக்குள் ஆண்டவன் இருக்கிறார். உடம்புக்குள் இருக்கும் உயிர் ஜீவாத்மா. உயிருக்குள் இருப்பது பரமாத்மா.

இந்த விளக்கம் பெறும்வரை, அதாவது ஆத்ம உணர்வுபெறும்வரை மனிதன் இருட்டுக்குள்ளேயேதான் இருக்கின்றான். மனிதனுக்குத் துன்பஞ் செய்கின்றவை பல. அவற்றுள் இருள் ஒன்று. இருளில் கட்டையா? கள்வனா? காலில் பட்டது சந்தனமா? சாணமா? அரவமா? கயிறா? என்று அறிந்து கொள்ள முடியாது. இது பூத இருள்; பூத இருள் தன்னைக் காட்டும் தனக்குள்ளே இருப்பதைக் காட்டாது. அக இருள் பூத இருளினும் கொடியது. அது தன்னையும் காட்டாது; தனக்குள் இருப்பதையும் காட்டாது. அகஇருளை ஆணவம் என்றும் ஆணவஇருள் என்றும் சொல்லுவர்.

"இன்ன காலத்திலே இந்தச் சரீரம் நீங்கும் என்பது நமக்கு விளங்காமையால், நாம் எக்காலத்திலும் கடவுளை வழிபடல் வேண்டும்".

உலகில் கவலை இல்லாத மாந்தர் இல்லை எங்கும் துக்கமே குடிகொண்டிருக்கிறது. ஒவ்வோர் உயிரும் கருதுவதும், நாடுவதும் தேடுவதும் இன்பம் ஒன்றே. ஆனால் அவ்வின்பத்தை எவ்வாறு அடைவது என்பதுதான் ஒருவரும் நன்கு அறிந்துகொள்ள முடியாதிருக்கிறது. இன்பம் எங்கே இருக்கிறது? அது எப்படி இருக்கும்? என்று தேடி அலுத்துச் சலிக்கிறார்கள். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொன்று இன்பம்போலத் தோன்றுகிறது. எது இன்பம் என்பதே நமக்கு நன்றாய்த் தெரிவதில்லை. இன்பம் அடையும் வழியிலும் நமக்குப் பழக்கம் ஏற்படுவதில்லை. துன்பத்தையே இன்பமாகக்கட்டிக்கொண்டு விடாப்பிடியாய் மாந்தர்கள் யாவரும் திரிகின்றனர்.

இன்பம் உலகில் இருக்கத்தான் செய்கிறது. துன்பக் கடலைக் கடந்து கரைஏறி அழியாத நித்திய இன்பத்தை அடைய வேண்டுமானால் சிவபெருமானை இடைவிடாது சிந்தனை செய்ய வேண்டும். இரவும் பகலும் தொடர்ந்து துதிக்கவேண்டும். அகண்டமாக நினைக்கவேண்டும். எண்ணெய் ஒழுக்குப் போல தொடர்ந்து இடையறாது நினைக்க வேண்டும். சிவன் என்பதற்கே இன்பத்தைச் செய்பவன் என்றுதான் பொருள். அன்பே சிவம்; சிவமே அன்புதான். அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்.

அவன் அடியவர்களுக்கு அன்பனாகிவிடுவான் அதைவிட இன்பம் வேறு என்ன இருக்கிறது! அதுவே பேரின்பம் என்கிறார் அப்பர் சுவாமிகள்.

> துன்பமின்றித் துயரின்றி என்றும்நீர்
> இன்பம்வேண்டில் இராப்பகல்
> ஏத்துமின்
> என்பொன் ஈசன் இறைவன்
> என்றுள்குவார்க்கு
> அன்பனுயிரும் ஆனைக்கா அண்ணலே.

இந்த உலகத்திற்கு ஒரு பெருமை உண்டு. இன்று இருந்தவன் நாளை இல்லை என்று சொல்லிக்கொள்ளுகின்ற பெருமை இந்த உலகத்திற்குத்தான் உண்டு,

> "இன்றைக் கிருப்பாரை நாளைக்கிருப்பர்
> என்றெண்ணவோ திடமில்லையே"

என்றும்

"வாழ்வாவது மாயம் இது மண்ணாவது திண்ணம்" என்றும் இப்படி எத்தனையோ பிறப்பு என்ற சொல்லினுள்ளே இறப்பு மறைந்திருக்கும் விந்தையே விந்தை. நாம் தேடுவது ஒன்று; ஆனால் நமக்கு அகப்படுவது நேர்மாறான மற்றொன்று, இன்பத்தைத் தேடுகின்றோம்; துன்பத்தை அடைகின்றோம். இது ஏன்? நமது கொள்கையின் அடிப்படையிலே ஏதோ கோளாறு இருக்கிறது. அது என்ன? நமது ஆசாபாசங்கள் நம்மை மயக்கி, அறிவைச் சிதைத்து நம்மை எளிதில் ஏமாற்றி விடுகின்றன. நமக்கு வேண்டாதவற்றை வேண்டியவைகளாய் நினைக்கிறோம். நமக்குத் தீங்கு விளைப்பனவற்றை நல்லனவாய் நாடுகின்றோம். நமக்கு இன்பம் விளைவிப்பவன் சிவபெருமான். அவனை நினையாது பாசவலையிலே புக்கு அழுந்துகின்றோம். உலகிற் பாசம் மிகப் பொல்லாதது. குற்றம் நிறைந்தது: அதனை அறுத்துக் களையவேண்டும். அப்பொழுது சிவன் நம்மீது அருள்புரிவான். ஈசனே என்று நாவால் ஓதினால், இன்பம் கடல்போலப் பொங்கி நம் உள்ளத்தில் ததும்பி நிற்கும்.

இதுவே நாவலர் பெருமான் காட்டிய வழியாகும்.

# நற்றமிழ் வல்ல மேன்மை
# "நாவலர்"

ஆங்கில மோக மென்னு
        மாட்சிசெய் திருந்த காலை
தாங்குறு தமிழும் பண்பும்
        சைவமும் மறந்த பேருக்
கிங்கிவை யுங்கள் மேன்மை
        யென்றெடுத் திடித்துச் சொன்ன
பாங்குறு குரவர் ஆறு
        முகன்றிருப் பதங்கள் போற்றி.

குற்றமி லெழுத்துப் பேச்சுக்
        கூரிய வாய்வுப் பண்பு
சொற்றமிழ் பாடு மாற்றல்
        தூமறை யோதும் பேறு
பெற்றதன் மான வாழ்வு
        பீடெலா மெம்ம னோர்க்கு
நற்றமிழ் வல்ல மேன்மை
        நாவலர் தந்த சொத்தாம்.

நற்றமிழ் சைவம் கல்வி
        நாடரும் நேர்மை நீதி
உற்றநல் லொழுக்க மேன்மை
        ஒப்புயர் வற்ற வாண்மை
மற்றுயர் மரபு யாவும்
        மன்னவ ரென்ன வந்த
கொற்றவர் நாவ லர்நன்
        கொடையவை பேணி வாழ்வாம்.

கலக்கமில் லாது கற்கக்
        கற்பக வசன நூல்கள்
இலக்கண வுரைகள் கல்வி
        புதுமுகந் தாங்கி மின்றும்
விலக்கரும் பால பாடம்
        வினாவிடை கண்ட னங்கள்
தலைக்கொளின் நாவ லர்நற்
        றமிழினில் திளைக்கலாமே.

தன்னிக ரற்ற நாவ
லர்தமிழ் தமிழர் கற்கின்
என்மொழி என்ன வென்ன
வென்னுயர் மீதி யென்ன
வெண்மர பென்ன ஏனோன்
இந்நிலை யின்றைக் கென்னத்
தன்னிலை றறிபு மார்வச்
சக்தியொன் றெழுதல் திண்ணம்!

வி. கந்தவனம்

---

## எமது சபையில் ஆண்டு தோறும் நடைபெறும் விழாக்கள்

| விழா : | உபயம் : |
|---|---|
| 1. அப்பர் சுவாமிகள் | டாக்டர் ஆ. சுப்பிரமணியம் |
| 2. திருஞானசம்பந்த சுவாமிகள் | S. S. கணபதிப்பிள்ளை & கோ. |
| 3. சுந்தரமூர்த்தி சுவாமிகள் | திரு. அ. கணபதிப்பிள்ளை உருமிஜா ஓவசியர் |
| 4. மாணிக்கவாசக சுவாமிகள் | திரு. ச. அம்பலவாணர் |
| 5. நாவலர் தினம் | ,, அ. முத்துச்சாமி |
| 6. விபுலானந்தர் தினம் | ,, செ. ஞானதீபம் |
| 7. பாரதியார் தினம் | ,, C. S. குமாரசாமி |
| 8. வள்ளுவர் தினம் | சபை |
| 9. சேக்கிழார் தினம் | ,, |

## நவராத்திரி விழாக்கள் :

1-ஆம் நாள் அஞ்சலக ஊழியர்
2-ஆம் நாள் திரு. க. கந்தையா, முருகன் ஸ்ரோர்ஸ்
3-ஆம் நாள் திரு. சு. கணபதிப்பிள்ளை, சரஸ்வதி ஸ்ரோர்ஸ்
4-ஆம் நாள் நியூ விஜயா கபே
5-ஆம் நாள் வர்த்தக நிலைய இளைஞர்கள்
6-ஆம் நாள் திரு. பொ. ஜெகதீசன்
7-ஆம் நாள் சுகாதார இலாகா ஊழியர்
8-ஆம் நாள் திரு. ம. குமாரசாமி, கண்டி ஸ்ரோர்ஸ்
9-ஆம் நாள் பொது ஊழியர்.

# 1974-1975 ம் ஆண்டுகளில் எமது சபையில் உரையாற்றிய பெரியார்கள்

1. திரு. க. சிவராமலிங்கம் B. A., இந்துக்கல்லூரி.
2. வித்துவான் பொன் கணகசபை.
3. திரு. ச. விநாயகமூர்த்தி B. A., வசாவிளான், ம. ம. வி.
4. பண்டிதர் குமாரகுரு
5. திரு. க. சொக்கலிங்கம் B. A. (சொக்கன்)
6. திரு. M. செல்வராசா B. Ed. (Hons)
7. திரு. N. K. சண்முகநாதபிள்ளை B. Sc.
8. பண்டிதர் சோ. தியாகராசபிள்ளை
9. சிவஸ்ரீ கு. பாலசுந்தரக் குருக்கள் B. A. (Hons.), மாவிட்டபுரம்.
10. திருமதி கங்கேஸ்வரி கந்தையா, மட்டுநகர்.
11. கவிஞர் காரை S. சுந்தரம்பிள்ளை B. A.
12. புலவர் ஈழத்துச் சிவானந்தன்
13. பேராசிரியர் சு. வித்தியானந்தன் M. A., Ph. D.
14. திரு. சி. பாலசிங்கம் B. A., Dip. in Ed.

---

# குருநாகல் சைவ மகா சபை
# நிர்வாகக் குழு - 1975/76

தலைவர்:
வைத்தியகலாநிதி ஆ. சுப்பிரமணியம்

உப தலைவர்கள்:
வைத்தியகலாநிதி சி. வரதராசன்
" K. குகதாசன்
திரு. செ. ஞானதீபம்
" க. சிவஞானசுந்தரம்
" சி. மு. கந்தப்பு

கௌரவ செயலாளர்:
திரு. மு. இராமலிங்கம்

கௌரவ தனாதிகாரி:
திரு. மு. கோபாலபிள்ளை

விடுதி அதிபர்:
திரு. ச. சுப்பிரமணியம்

உதவி செயலாளர்:
திரு. ஆ. க. நடராசா

உதவி தனாதிகாரி:
திரு. க. வல்லிபுரநாதன்

நூலக அதிபர்:
திரு. சி. பாலசிங்கம்

அங்கத்தவர்கள்:

திரு. க. சதாசிவம்
,, க. தர்மலிங்கம்
,, இ. சாம்பசிவம்
,, பொ. ஜெகதீசன்
,, த. சிவசுப்பிரமணியம்
,, த. இராசமாணிக்கம்
,, செ. கதிரேசம்பிள்ளை
,, ம. திலகநாதன்
,, P. செல்வரத்தினம்

---

# குருநாகல் சைவ மகாசபை அங்கத்தவர்கள்

## ஆயுள் அங்கத்தவர்கள்:

1. திரு.ச. அம்பலவாணர், 46, அன்றூஸ் லேன், தெகிவளை.
2. டாக்டர் ஆ. சுப்பிரமணியம், குருநாகல்.
3. திரு. இ. சோமசுந்தரம், ''ரஞ்சனுஸ்'', குருநாகல்.
4. ,, பீ. உமாபதிசிவம், ஆரயம்பதி காத்தான்குடி.
5. ,, செ. ஞானதீபம், குருநாகல்.
6. ,, க. பாலசுப்பிரமணியம், உடுவில் தெற்கு.
7. ,, சோ. இராஜாராம், 15A, சீனிவாசகம் வீதி, யாழ்ப்பாணம்.
8. ,, க. சிவசுப்பிரமணியம், வதிரி வடக்கு, கரவெட்டி.
9. ,, வ. சுந்தரலிங்கம், சுதுமலை மேற்கு, மானிப்பாய்.
10. ,, த. கயிலாசநாதன், மஞ்சத்தடி, இணுவில்.
11. ,, த. பொன்னையா, நவிண்டி, கரவெட்டி.
12. ,, ச. அ. குமாரசூரியர், இமையாணன், உடுப்பிட்டி.
13. ,, க. ஏகாம்பரம், கதிரிப்பாய். அச்சுவேலி.
14. ,, சு. கணபதிப்பிள்ளை, 15, நீர்கொழும்பு வீதி, குருநாகல்.
15. ,, பெ. சுப்பிரமணியம், புத்தளம் வீதி, குருநாகல்.
16. ,, க. கந்தையா, 100, புத்தளம் வீதி, குருநாகல்.
17. ,, வீ. எஸ். மூர்த்தி, 3, கடை வீதி, குருநாகல்.
18. ,, ச. சு. சங்கரப்பிள்ளை, S. S. K., புத்தளம் வீதி, குருநாகல்.
19. ,, க. பரமநாதன், பவளம் லொட்ஜ், குருநாகல்.
20. ,, அ. முத்துச்சாமி, கண்டி காட்வெயர்ஸ், குருநாகல்.

## விடுதி அங்கத்தவர்கள்

1. திரு. மா. திலகநாதன், தபாலகம்.
2. ,, க. வல்லிபுரநாதன், தபாலகம்.
3. ,, பாலசுப்பிரமணியம், நிலஅளவை.
4. ,, மு. இராமலிங்கம், அதிபர்.
5. ,, சி. பாலசிங்கம், ஆசிரியர்.
6. ,, எஸ் தியாகராஜா, தபாலகம்.
7. ,, ஆ. அருளானந்தம், பதிவகம்.
8. ,, ஆ. க. நடராசா, ஆசிரியர்.
9. ,, ச. சுப்பிரமணியம், நீதிமன்றம்.
10. ,, ச. விக்னேஸ்வரமூர்த்தி, தபாலகம்.
11. ,, ச. கதிரேசம்பிள்ளை, R. M. P.
12. ,, க. இராசேந்திரம், நிலஅளவை.
13. ,, க. புவிநாதன், இராசா எஞ்சினியர்.
14. ,, க. சிவஞானம், ஆஸ்பத்திரி.
15. ,, ச. கனகசபை, R. M. P.
16. ,, ச அருணாசலம், தபாலகம்.

## சாதாரண அங்கத்தவர்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | திரு. ச. த. விக்னேஸ்வரன், | 60, | புத்தளம் வீதி, | குருநாகல் |
| 2. | திரு. க. ச. குமாரசாமி, | 56, | ,, | ,, |
| 3. | திரு. க. புவிநாதன், | 154 | ,, | ,, |
| 4. | திரு. க. கனகராசா, | 68 | ,, | ,, |
| 5. | திரு. ம. இராசலிங்கம் | ,, | ,, | ,, |
| 6. | வே. செல்வநாயகம் | ,, | ,, | ,, |
| 7. | திரு. ஆ. சுப்பிரமணியம் | ,, | ,, | ,, |
| 8. | திரு. க. ஆறுமுகம், | 39 | ,, | ,, |
| 9. | திரு. க. சுந்தரலிங்கம், ஆனந்தபவான் | | ,, | ,, |
| 10. | திரு. க. தட்சணாமூர்த்தி | ,, | ,, | ,, |
| 11. | திரு. பெ. நடராசா | 154 | ,, | ,, |
| 12. | திரு. ஆ. சிவபாலன் | 68 | ,, | ,, |
| 13. | திரு. க. கிருஷ்ணன் | 154 | ,, | ,, |
| 14. | திரு. க. துரைராசசிங்கம் | 68 | ,, | ,, |
| 15. | திரு. ஆ. ஆனந்தசபாபதி | 463 | ,, | ,, |
| 16. | திரு. ச. வல்லிபுரம் | 39 | ,, | ,, |
| 17. | திரு. கே. இரத்தினசிங்கம் | 90 | ,, | ,, |
| 18. | திரு. வே. பாலசிங்கம் | 56 | ,, | ,, |
| 19. | திரு. V V, முத்து, விஜயா கபே, | | ,, | ,, |
| 20. | திரு. K. வேலுப்பிள்ளை | ,, | ,, | ,, |
| 21. | திரு K. சின்னத்தம்பி | ,, | ,, | ,, |
| 22. | திரு க. கந்தையா | 3, | கடை வீதி | ,, |
| 23. | திரு. வீ. வைரமுத்து | 13 | ,, | ,, |
| 24. | திரு. மு. சி. சோமசுந்தரம் | 32 | ,, | ,, |

| | | | | |
|---|---|---|---|---|
| 25. | திரு. வ. ஆ. செல்லையா | 57 | கடை வீதி | குருநாகல் |
| 26. | திரு. ம. குமாரசாமி | 65 | ,, | ,, |
| 27. | திரு. மு. சி. பொன்னையா | 87 | ,, | ,, |
| 28. | திரு. சோ. திருநாவுக்கரசு | 3 | ,, | ,, |
| 29. | திரு. செ. சபாரத்தினம் | ,, | ,, | ,, |
| 30. | திரு. பெ. பூபாலசிங்கம் | 13 | ,, | ,, |
| 31. | திரு. வே. வீரவாகு | ,, | ,, | ,, |
| 32. | திரு. அ. அழகர்சாமி | 42 | ,, | ,, |
| 33. | திரு. பொ. லிங்கராசா | 87 | ,, | ,, |
| 34. | திரு. செ. பொன்னையா | 34, | பரகும்பா வீதி | ,, |
| 35. | திரு. சு. வேல்முருகு | 60 | ,, | ,, |
| 36. | திரு. க. கனகசபை | 122 | ,, | ,, |
| 37. | திரு. பூ. சத்தியநாதன் | 53, | நீர்கொழும்பு வீதி | ,, |
| 38. | திரு. சி. நாகரத்தினம் | 57 | ,, | ,, |
| 39. | திரு. கு. செல்வராசா | 15 | ,, | ,, |
| 40. | திரு. த. சிவஞானேஸ்வரம் | | ,, | ,, |
| 41. | திரு. பொ. பெரியதம்பி | | ,, | ,, |
| 42. | திரு. பொ. ஜெகதீசன், | 276, | கண்டி வீதி | ,, |
| 43. | திரு. த. சிவஞானசுந்தரம் | | ,, | ,, |
| 44. | திரு. க. தருமலிங்கம், | | அரசினர் வைத்தியசாலை | ,, |
| 45. | திரு. இ. சாம்பசிவம் | | ,, | ,, |
| 46. | திரு. கா. நவரத்தினம் | | ,, | ,, |
| 47. | செல்வி ஞானசோதி இராமநாதன் | | ,, | ,, |
| 48. | திரு. மு. கோபாலபிள்ளை | | ,, | ,, |
| 49. | திரு. பொ. இராமகிருஷ்ணன் | | ,, | ,, |
| 50. | திரு. வே. வீரசிங்கம் | | ,, | ,, |
| 51. | டாக்டர் சி. வரதராசன் | | ,, | ,, |
| 52. | டாக்டர் க. குகதாசன் | | ,, | ,, |
| 53. | திரு. சி. சிவஞானம் | | ,, | ,, |
| 54. | திரு. V. N. பாலசிங்கம் | | ,, | ,, |
| 55. | திரு. பொ. செல்வரத்தினம் | | ,, | ,, |
| 56. | திரு. வி. பாலச்சந்திரன் | | ,, | ,, |
| 57. | திரு. சி. துரைராசா | | ,, | ,, |
| 58. | திரு. த. கணபதிப்பிள்ளை, | | தபாலகம் | ,, |
| 59. | திரு. மா. திலகநாதன் | | ,, | ,, |
| 60. | திரு. சி. மு. கந்தவனம் | | ,, | ,, |
| 61. | திரு. க. வல்லிபுரநாதன் | | ,, | ,, |
| 62. | திரு. செ. விக்னேஸ்வரமூர்த்தி | | ,, | ,, |
| 63. | திரு. ஆ. சுப்பிரமணியம் | | ,, | ,, |
| 64. | திரு. க. குகப்பிரசாதம் | | மின்சார சபை | ,, |
| 65. | திரு. பொ. வேலாயுதபிள்ளை | | தபாலகம் | ,, |
| 66. | திரு. சு. கணபதிப்பிள்ளை | | மல்கடுவாவ | ,, |
| 67. | திருமதி நித்தியலட்சுமி தம்பிராசா, | | தம்பிராஜ மாவத்த, | குருநாகல் |
| 68. | திரு. க. இரத்தினசபாபதி | | மலேரியா தடுப்பு பகுதி | ,, |
| 69. | திரு. ச. பத்மநாதன் | | மாநகர சபை | ,, |

| | | | |
|---|---|---|---|
| 70. | திரு. த. இராசமாணிக்கம் | பிரவுண் அன் கோ. | குருநாகல் |
| 71. | திரு. க. சிவபாதசுந்தரம் | கட்டிடத் திணைக்களம் | ,, |
| 72. | திரு.ச. குலசிங்கம் | மாநகர சபை | ,, |
| 73. | திரு. ஆ. அருளானந்தம் | காணிப் பதிவகம் | ,, |
| 74. | திரு. N. A. ஈஸ்வரன் | அரசினர் வைத்தியசாலை | ,, |
| 75. | திரு. சி. சுப்பிரமணியம் | உயர் நீதி மன்றம் | ,, |
| 76. | திரு. சி. தேவேந்திரா | E. E. அலுவலகம் | ,, |
| 77. | திரு. பாலகிருஷ்ண ஐயர் | D. W. அலுவலகம் | ,, |
| 78. | திரு. செ. பாலசுப்பிரமணியம் | நில அளவை அலுவலகம் | ,, |
| 79. | திரு. மு. பத்மநாதன் | மின்சார சபை | ,, |
| 80. | திரு. சோ. இராசேந்திரம் | நில அளவைப் பகுதி | ,, |
| 81. | திரு. இ. லோகேந்திரன் | மார்புநோய் சிகிச்சை நிலையம் | ,, |
| 82. | திரு. வே. சின்னராசா | ,, | ,, |
| 83. | திரு. சி. கமலநாதன் | வட்டாரக் கல்வி அதிகாரி | ,, |
| 84. | திரு. ச. பத்மநாதன் | மின்சார சபை | ,, |
| 85. | திரு. ஆ. கா. நடராசா | ஹிஸ்புல்லா மகா வித்தியாலயம் | ,, |
| 86. | திரு. சி. பாலசிங்கம் | ,, | ,, |
| 87. | திரு. மு. இராமலிங்கம் | இந்து தமிழ் மகா வித்தியாலயம் | ,, |
| 88. | திரு. க. கந்தசாமி | ,, | ,, |
| 89. | திரு. சு. இரகுபதி | ,, | ,, |
| 90. | செல்வி சுபத்திரா இராமநாதன் | ,, | ,, |
| 91. | செல்வி சரோஜினி குப்புசாமி | ,, | ,, |
| 92. | திருமதி ப. கமலேஸ்வரன் | ,, | ,, |
| 93. | திரு. வே. முருகையா | உள்நாட்டு இறைவரி அலுவலகம் | ,, |
| 94. | திரு. வ. கனகரத்தினம் | 122, பரகும்பா வீதி | ,, |
| 95. | திரு. மு. கனகரத்தினம் | இலங்கை வங்கி | கண்டி |
| 96. | திரு. த. வடிவேலு | கட்டிடத் திணைக்களம் | அனுராதபுரம் |
| 97. | திரு. இ. சதாசிவம் | கரணவாய் தெற்கு | கரவெட்டி |
| 98. | திரு. பொ. கனகசபை | சூருவத்தை | சுன்னாகம் |
| 99. | திரு. சு. கதிரேசம்பிள்ளை | கும்பளாவளை | அளவெட்டி |
| 100. | திரு. மூ. சீ. கந்தப்பு | 'சந்திர மகால்' | அல்வாய் |
| 101. | திரு. வி. சிவபாலசுந்தரம், | அப்புக்காத்து ஒழுங்கை, | வல்வெட்டித்துறை. |

# நாவலர் விழா முக்கிய நிகழ்ச்சி

1. மங்கள விளக்கேற்றல்: **உயர்திரு. ச. அம்பலவாணர் அவர்கள்**
2. தேவாரம் 3. வரவேற்புரை 4. தலைவர் முன்னுரை.

## கருத்தரங்கு

தலைவர்: கல்விப்பணிப்பாளர் **திரு. கி. லக்ஷ்மண ஐயர்** (கல்வி அமைச்சு)

பங்குகொள்வோர்

தென்புலோலியூர் திரு. மு. கணபதிப்பிள்ளை (தொழில் அமைச்சு) — "சமுதாய நல்வழிக்குறுதுணை — மொழியும் இலக்கியமும்"

சிவத்தமிழ்ச் செல்வி **தங்கம்மா அப்பாக்குட்டி** (யூனியன் கல்லூரி) — 'சமயம்'

மலையக இளைஞர் முன்னணி பொதுச் செயலாளர்:
திரு. இரா. சிவலிங்கம் (பிரதம க. அ. பாடவிதான நிலையம்) — 'கல்வி'

உடுப்பிட்டி திரு. மு. சிவசிதம்பரம் (முன்னாள் உப சபாநாயகர்) — 'சட்டமும் ஒழுங்கும்'

## கவியரங்கு

தலைவர்: வித்துவான் சி. **ஆறுமுகம்** *(ஸ்கந்தவரோதயக் கல்லூரி, சுன்னாகம்)*

| பங்குபற்றுவோர்: | பொருள் |
|---|---|
| கவிமணி வி. கந்தவனம் | "நற்றமிழ் வல்ல நாவலன்" |
| கவிஞர் அம்பிகைபாகர் (அம்பி) | "சைவம் காத்த நாவலன்" |
| கவிஞர் மு. பொன்னம்பலம் | "சீர்திருத்தவாதி நாவலன்" |
| அரியாலையூர் கவிஞர் வே. ஐயாத்துரை | "கர்ம வீரன் நாவலன்" |

## பாராட்டு

*பெறுவோர்:*
சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி
சிவநெறிக் காவலர் உயர்திரு. க. கனகராசா J. P.
*(மில்க்வைற் சவற்காரத் தொழிலக அதிபர்)*

*பாராட்டுரை:*
திருமதி பாலம் லக்ஷ்மணன்
திரு. சி. கமலநாதன்
*(வட். கல்வி அதிகாரி விஞ்.)*

★ "சைவம்" சிறப்பு மலர் வெளியீடு ★

*வெளியிட்டு வைப்பவர்:* உயர்திரு. வ. மா. இராமையா *(ஓய்வுபெற்ற சிறப்பர், குருநாகல்)*

*பிரதிகள் பெறுவோர்:* 1. டாக்டர் S. பொன்னம்பலம் 2. திரு. ச. சு. சங்கரப்பிள்ளை S. S K.& Co.
3. திரு வே. சுந்தரலிங்கம் M.P.V. & Co.
4. திரு. பெ சுப்பிரமணியம் ஸ்ரீ குமரன் ரேடர்ஸ்
5. திரு. க நமசிவாயம் V. T. S. & Co.
6. திரு. S. கணபதிப்பிள்ளை சரஸ்வதி ஸ்ரோர்ஸ்

## இசையரங்கு

★ வில்லிசை விருந்து — "நல்லைநகர் நாவலன்" ★

அன்புக் கடல் திருப்பூங்குடி விஜ வி. கே. ஆறுமுகம் அவர்கள்

*ஆர்மோனியம்:* மாஸ்டர் K. சிவஞானம் *பின்னணி:* காரைக்கால் வை. அருளையா
*குடமுழவு-நகைச்சுவை:* வண்ணை வேணு மகாதேவன் *தபோலா-டொல்க்கி:* A. கைலாசபிள்ளை

## நடன அரங்கு

*நடனம்:* செல்வி N. வசந்தாதேவி குழுவினர்
*தயாரிப்பு:* திருமதி ம. ஜெகநாதன்
செல்வி. கு. சரோஜினி

## நாடக அரங்கு

குருநாகல் இந்து தமிழ் மகா வித்தியாலய
பழைய மாணவர் சங்கம் அளிக்கும்

★ *சாம்ராட் அசோகன்* ★

# 29-11-75 ல் நடைபெற்ற முத்தமிழ் விழாவிற்கு நிதி உதவியோர்

| | |
|---|---|
| திரு. அ. முத்துச்சாமி, கண்டி ஹாட்வெயர்ஸ் | 251-00 |
| திரு. K. R. பரமநாதன், பவளம்ஸ் லொட்ஜ் | 251-00 |
| திருமதி நி. தம்பிராசா, குருநாகல் | 250-00 |
| டாக்டர் ஆ. சுப்பிரமணியம் ,, | 100-00 |
| திரு. செ. ஞானதீபம் ,, | 100-00 |
| ,, க. சிவஞானசுந்தரம், நிலஅளவையாளர் | 100-00 |
| ,, பெ. சுப்பிரமணியம், ஸ்ரீ குமரன் றேடர் | 100-00 |
| ,, M. P. வீரவாகு & கோ | 100-00 |
| திரு. இ. சோமசுந்தரம் ரஞ்சஞ்ஸ் | 51-00 |

## வைத்தியசாலை, குருநாகல்.

| | |
|---|---|
| டாக்டர் சி. வரதராஜன் | 50-00 |
| ,, S. பொன்னம்பலம் | 50-00 |
| ,, K. யோகேஸ்வரன் | 50-00 |
| ,, சி. மாணிக்கவாசகர் | 25-00 |
| ,, T. தனபாலசிங்கம் | 10-00 |
| டாக்டர் செல்வி ர. சங்கரப்பிள்ளை | 10-00 |
| டாக்டர் ந. புவனேந்திரன் | 10-00 |
| ,, த. உமைபாலன் | 10-00 |
| ,, பொ. திருவுடையன் | 10-00 |
| ,, ச. பரமேஸ்வரன் | 10-00 |
| ,, சி. சிவப்பிரகாசம் | 10-00 |
| ,, செல்வி M. நடராசா | 10-00 |
| ,, ,, யோ. செல்வராசா | 10-00 |
| ,, ,, S. அரியரட்ணம் | 10-00 |
| டாக்டர் ஶ்ரீ. சிறிஸ்கந்தன் | 10-00 |
| ,, S. துரைராஜன் | 10-00 |
| ,, K. சிவபாலன் | 10-00 |
| ,, V. K. T. பிரான்சிஸ் | 10-00 |
| ,, K. விஜயகாந்தன் | 10-00 |
| ,, க. சிவசின்மயானந்தன் | 10-00 |
| ,, D. சந்தியாப்பிள்ளை | 10-00 |
| ,, P. சொர்ணலிங்கம் | 10-00 |
| ,, K. கதிர்காமநாதன் | 10-00 |
| ,, செல்வி S. கணபதிப்பிள்ளை | 10-00 |
| [illegible]க்டர் திருமதி பாலகுமாரன் | 10-00 |
| [illegible]. பொ. செல்வரத்தினம், காரியதரிசி, வைத். குருநாகல் | 10-00 |

## மருந்தாளர் வைத்தியசாலை, குருநாகல்

| | |
|---|---|
| திரு. வே. வீரசிங்கம் | 10-00 |
| ,, ஶ்ரீ. சாம்பசிவம் | 10-00 |
| ,, மு. கோபாலபிள்ளை | 10-00 |
| ,, சி. சிவஞானம் | 10-00 |
| ,, க. கணேசன் | 5-00 |
| செல்வி ஞா. ராமநாதன் | 5-00 |
| திரு. சின்னராசா | 5-00 |
| திரு. புஸ்பானந்தராஜா | 5-00 |
| செல்வி அ. கதிர்காமத்தம்பி | 5-00 |
| திரு. திருமதி V. பாலச்சந்திரன் | 10-00 |
| திரு. கா. நவரத்தினம் | 5-00 |
| திரு. S. கந்தசாமி | 5-00 |
| செல்வி த. ஜெகதாம்பாள் | 5-00 |
| திரு. S. துரைராசா E. C. G | 5-00 |
| திரு. க. தர்மலிங்கம் M. L. T. | 10-00 |
| திரு. இ. சதாசிவம் R. M. P | 10-00 |
| திரு K. சுந்தரேஸ்வரன் | 10-00 |
| திரு. த. இராசரத்தினம் M. L. T. | 5-00 |

## பொலிஸ் நிலையம், குருநாகல்

| | |
|---|---|
| திரு. C. தில்லைநடராஜா | 5-00 |
| ,, P. நடராசா | 5-00 |
| ,, S. சண்முகராசா | 5-00 |
| ,, M. திருஞானதீபன் | 5-00 |
| ,, S. வெற்றிவேலாயுதம்பிள்ளை | 5-00 |
| ,, S. ஆனந்தரத்தினம் | 5-00 |
| ,, S. செல்வராசா | 5-00 |
| ,, K. V. சிவசேகரம், பிரதம லிகிதர். பொ. அத்.அ. | 15-00 |
| திரு. வி. சி. மூர்த்தி, பசார் வீதி | 15-00 |
| ,, C. S. குமாரசாமி | 10-00 |
| திரு. மு. இராமலிங்கம், அதிபர், இந்து தமிழ் ம வி. குரு. | 25-00 |
| ,, க. கந்தசாமி, ஆசிரியர் ,, | 25-00 |
| ,, சி. இரகுபதி ,, ,, | 20-00 |
| திருமதி P. கமலேஸ்வரன் ,, | 20-00 |
| ,, R. சதானந்தன் ,, | 20-00 |
| ,, M. ஜெகநாதன் ,, | 15-00 |
| செல்வி K. செல்லையா ,, | 15-00 |
| ,, S. இராமநாதன் ,, | 15-00 |
| ,, கு. சரோஜினி ,, | 5-00 |

| | |
|---|---|
| ஜனுப் M. M: தாஹிர் | |
| இந்து தமிழ் ம.வி. குரு. | 5-00 |
| ,, A. M. யாசீன் ,, | 5-00 |
| ,, H. M. தாயுடின் ,, | 5-00 |
| திருமதி F. K. குணவர்த்தன | 5-00 |
| திரு. சு. இரகுபதி | 5-00 |
| திரு. மா. திலகநாதன், தபாலகம் கு. | 10-00 |
| ,, க. வல்லிபுரநாதன் ,, | 10-00 |
| ,, M. அருணைசலம் ,, | 5-00 |
| ,, சி. மு. கந்தவனம் ,, | 5-00 |
| ,, S. தியாகராசா ,, | 10-00 |
| ,, க. துரைராசா ,, | 5-00 |
| திரு. செ. பாலசுப்பிரமணியம் | |
| நில அளவையாளர் அலுவலகம் | 5-00 |
| திரு ச குலசிங்கம், வே. ப. | |
| அத்தி மாநகரசபை குரு. | 25-00 |
| திரு M. கனகரத்தினம், | |
| இலங்கை வங்கி, கண்டி | 15-00 |
| திரு: S குகப்பிரசாதம், | |
| இல. மின்சாரசபை | 15-00 |
| யாழ்ப்பாணம் ஸ்ரோர்ஸ் பசார் வீதி | 10-00 |
| திரு: ப. கணேசரத்தினம், | |
| பொரும்ப வீதி, | 5-00 |
| ,, ஆ. அருளானந்தம், | |
| பதிவாளர் அலுவலகம் | 10-00 |
| திரு. சி. பாலசிங்கம், | |
| ஆசிரியர், ஹிஸ்புள்ளா ம. வி. குரு. | 15-00 |
| திருமதி P. விஸ்வலிங்கம், | |
| ஆசிரியை ,, | 15-00 |
| ,, S. சபாபதி ,, | 10-00 |
| திரு. சி. சோதிலிங்கம் ,, | 10-00 |
| ,, A. K. நடராசா ,, | 10-00 |
| செல்வி G. அப்புத்துரை ,, | 10-00 |
| ஜனுப் M. H. A. புகாரி, அதிபர் ,, | 10-00 |
| பொல்கொவல R. C. வித்தியாலயம் | 30-00 |
| திரு. M. சத்தியநாதன் | 5-00 |
| திருமதி P. சபாபதி ஹிஸ்புள் ம வி | 10-00 |
| திரு. சிவநேசன், தெலியாகொன்ன | 10-00 |
| செல்வன் V. தயாநிதி ,, | 5-00 |
| ,, V. தங்கவேலு ,, | 5-00 |
| திருமதி K. ஆத்மநாதன் ,, | 5-00 |
| ,, S மாரியாயி ,, | 10-00 |
| திரு. டிலிப் அளகிரி | 25-00 |
| ,, க. கந்தையா | 5-00 |
| ,, T. செல்லையா | 10-00 |
| ,, சி. சிவபாலசிங்கம் | 5-00 |
| திரு. வே. வீரவாகு | 5-00 |
| ,, மு. சீ. சோமசுந்தரம் | 5-00 |
| ,, பசுபதி | 5-00 |
| ,, வ. ஆ. செல்லையா | 5-00 |
| ஆரியபவான் | 5-00 |
| திரு. அ. கனகசுந்தரம், | |
| அதிபர், சரஸ்வதி வித். மாவத்: | 10-00 |
| திரு. K. ஞானசேகரம் ,, | 5-00 |
| ,, M சதாசிவம் ,, | 5-00 |
| ,, P. கணேசலிங்கம் ,, | 5-00 |
| செல்வி M. செல்வதுரை ,, | 5-00 |
| ,, J. சின்னையா ,, | 5-00 |
| திரு. செ. திருநாவுக்கரசு, ஆசிரியர் | |
| பரக்கதெனியா | 25-00 |
| திரு A. இராசசுந்தரம் கச்சேரி குரு. | 20-00 |
| திரு. சி. கமலநாதன் வ. அ (விஞ். | 15-00 |
| திரு. ச. குலசிங்கம், மாநகரசபை கு. | 25-00 |
| திரு. செ. விக்னேஸ்வரமூர்த்தி, தபா | 15-00 |
| திரு. சு. கதிரேசம்பிள்ளை R. M. P. | 15-00 |
| திரு. மா. செல்வராசா, | |
| நாரம்மலை ம. வி. | 10-00 |
| திரு. து. பாலசுப்பிரமணியம், | |
| கல்விக்கந்தோர் குருநாகல் | 5-00 |
| திரு. V. முத்துக்குமாரசாமி ,, | 5-00 |
| திரு. சி. துரைராசா ஆஸ்ப. குரு. | 5-00 |
| திரு. மு. சிவஞானசுந்தரம் P.H.I. | 10-00 |
| திரு. A. சிவரத்தினம் A. S. M. குரு. | 5-00 |
| திரு. செ. ஐயம்பிள்ளை மாநகரசபை | 5-00 |
| திரு. K துரைசிங்கம், R. M. P. குரு | 10-00 |
| திரு. ச. பத்மநாதன் மாநகரசபை | 5-00 |
| திரு. சி. சுப்பிரமணியம் நீதிமன்று | 10-00 |
| திரு. கோ. இராசேந்திரம் நிலஅளவை | 10-00 |
| திரு. சி. கனகராசா, R. M. P. | 5-00 |
| திரு. V. பாலசுப்பிரமணியம் ,, | 5-00 |
| திரு. V. வேலாயுதம் ,, | 5-00 |
| திரு. P. M. நடராசா ,, | 5-00 |
| திரு. S. இராசேந்திரா ,, | 5-00 |
| திரு. சந்திரசேகரா, | |
| பொறியியலாளர் | 10-00 |
| ,, க. யோகநாதன் ,, | 15-00 |
| M. J. நஸீர் குரு/ரீ ஸ்ரோஸ் | 5-00 |
| K தேவராஜ் ,, | 5-00 |
| T. தங்கராஜ் றஞ்சனுஸ் | 3-00 |
| S சீனிவாசகம் ,, | 3-00 |
| P. மும்மூர்த்தி ,, | 3-00 |
| E. பெரியசாமி ,, | 5-00 |

| | | | |
|---|---|---|---|
| S. நமசிவாயம் V. T. S. & Co | 3-00 | J. கனகேஸ்வரி குரு/இ. த. ம. வி. | 3-00 |
| M. A. முத்துக்குமாரு ,, | 3-00 | A L A நவாப் ,, | 3-00 |
| S. விநாயகமூர்த்தி ,, | 3-00 | R. சுந்தரகுமார் ,, | 5-00 |
| A. P. ஆழ்வாப்பிள்ளை ,, | 3-00 | G ஜெயந்தி ,, | 3-00 |
| V. M. தருமலிங்கம் ,, | 3-00 | ஹிஸ்புல்லா முஸ்லிம் மஹா வித். | 7-00 |
| K. கந்தசாமி ,, | 3-00 | M. K அனிஸ் | |
| S. ஸ்ரீ சோதிநாதன் ,, | 3-00 | ஹிஸ்புல்லாஹ் மு. ம. வி. | 3-00 |
| V. ஆனந்தராசா ,, | 3-00 | S. ஹரிஹரன் ,, | 3-00 |
| S. கிருஷ்ணபிள்ளை ,, | 3-00 | M மகேந்திரராஜ் ,, | 3-00 |
| K. P. இந்திரசிறி ,, | 3-00 | J. ஜோதிநாதன் ,, | 3-00 |
| S. வேலாயுதம் ,, | 3-00 | M. A. R. கருணாரத்தின ,, | 3-00 |
| A. பரமலிங்கம் ,, | 3-00 | N யோகநாதன் ,, | 3-00 |
| K. வைரமுத்து ,, | 3-00 | M. க்மர்தீன் ,, | 2-00 |
| M. I. செல்வராஜா, குரு/இ த. ம. வி. | 3-00 | A M. இல்யாஸ் ,, | 2-00 |
| V. S. முத்துராசா ,, | 3-00 | A செல்வராஜ் ,, | 2-00 |
| M. G. ஸ்ரீகாந்தன் ,, | 3-00 | P. மனோன்மணி ,, | 2-00 |
| M. குபேந்திரன் ,, | 3-00 | சரஸ்வதி ,, | 2-00 |
| R. கமலாம்பிகை ,, | 3-00 | S. L. M. ஹம்சா ,, | 3-00 |
| T. வத்சலா ,, | 4-00 | A. H N. மொஹம்மட் ,, | 2-00 |
| N. கனகநாதன் ,, | 5-00 | M. S M. ஜலால்தீன் ,, | 2-00 |
| M. I. M. ஜெய்னுதீன் ,, | 5-00 | S. L. M. பளீல் ,, | 2-00 |
| P. நமசிவாயம் ,, | 6-00 | A J. M அஜிலன் ,, | 3-00 |
| S. உதயசங்கரன் ,, | 5-00 | சரஸ்வதி கபே | 3-00 |
| J. சாந்தினி ,, | 3-00 | பதிரியா ஹோட்டல் | 3-00 |
| S. அங்கயற்கண்ணி ,, | 4-00 | பொல்காவெலயில் சேர்ந்தது | 30-00 |
| K. விஜயகுமாரி ,, | 3-00 | கா. சு. இராமையா, தம்பதெனியா | 3-00 |
| S. சீதாதேவி ,, | 3-00 | K அரசரத்தினம் ,, | 2-00 |
| N. மங்களேஸ்வரி ,, | 3-00 | ஆரியரட்னம் ,, | 2-00 |
| M. சுமதி ,, | 5-00 | K. கந்தையா ,, | 1-00 |
| S. மகேஸ்வரன் ,, | 4-00 | P. தங்கவேல் ,, | 3-00 |

# நன்றி

நாவலர் விழாவினை முத்தமிழ் விழாவாக எடுக்க விழைந்தோம். சபையின் பொருளாதாரம் இடந்தராது என்பதை நினைந்து சற்றுத் தயங்கினோம். எனினும் முயற்சி திருவினையாக்கும் என்ற எண்ணம் முன்னின்றிழுக்க சபைச் செயற்குழுவின் ஒத்துழைப்பு பின்னின்று உந்த செயலில் ஈடுபட்டோம். எதிர்பார்த்ததற்கு மேலாகப் பொருளுதவி கிடைத்தது. விழாவும் சிறப்பாக நடைபெற ஏதுவாயிற்று. இவற்றிற்கெல்லாம் பூரண ஒத்துழைப்பு நல்கிய சைவ மகாசபைச் செயற்குழுவுக்குப், தாராளமாக பொருளுதவி புரிந்த அன்பர்களுக்கும், 'சைவம்' சிறப்பு மலருக்கு ஆசியுரை கட்டுரை, கவிதை வழங்கிய அறிஞர்களுக்கும் விழாவில் பங்குகொண்ட அறிஞர்கள், கலைஞர்கள் அனைவருக்கும் அழகுற அச்சிட்டுதவிய ஸ்ரீ பார்வதி அச்சகத்தாருக்கும், முத்தமிழ் விழாவின் சகல அலுவல்களிலும் ஈடுபட்டுதவிய அன்பர்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றி.

மு. இராமலிங்கம்
கௌரவ செயலாளர்

சைவமா! சத்துள்ள உணவா?

# கபே பிருந்தாவனத்திற்கு

## வருகை தாருங்கள்

அறுசுவை உணவுண்டு - அருந்த பசும் பாலுண்டு


பலகார வகை உண்டு - பாதாம் அல்வா உண்டு

இனிய சிற்றுண்டி வகை இவை அனைத்துமுண்டு.

**144, ஆஸ்பத்திரி வீதி. — யாழ்ப்பாணம்.**

உரிமையாளர்: *வே. க. சுப்பிரமணியம்*

---



பாத அணிகளுக்கு

நவநாகரீகப் பொருட்களுக்கு

# ★ நாதன்'ஸ் ★

**நவீன சந்தை, யாழ்ப்பாணம்.**

தொலைபேசி: **7540**

## FOR FOOT WEARS & FANCY GOODS

# NATHAN'S

**Modern Market,** *Phone:* 7540 **JAFFNA.**



தீயனவற்றைக் கேளாதே
தீயனவற்றைப் பேசாதே
தீயனவற்றைப் பார்க்காதே

නරක දේ නො අසන්න
නරක දේ කථා නොකරන්න
නරක දේ නො බලන්න

HEAR NO EVILS - SPEAK NO EVILS
SEE NO EVILS

## எங்கள் தயாரிப்புகள் எப்படியானவை?

குறைந்த விலையில் சிறந்த பொருள்கள்
நாற்பத்தெட்டு ஆண்டுகள் நமது அனுபவம்
உள்ளூரில் உங்களுக்கான தயாரிப்புகள்
மேலுறைகளுக்கு விதம் விதமான அன்பளிப்புகள்
ஆதரவு பெருகுதல் அறப்பணிக்கே உதவும்
தரத்தில் குணத்தில் தலைசிறந்த தயாரிப்புகள்
மில்க்வைற் தயாரிப்புக்கள் மேலான தரத்தவை
உங்கள் திருப்தி எங்கள் மகிழ்ச்சி
மில்க்வைற் தயாரிப்பை மீண்டும் வாங்குங்கள்
எங்கும் இடைக்கும் எல்லோரும் வாங்குங்கள்

**ஆதரவாளர்களுக்கு அன்பு வணக்கம்.**

# மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்,

**த. பெ. இல. 77, யாழ்ப்பாணம்.**

தொலைபேசி: **7233** தந்தி: **"மில்க் வைற்"**

கிளை: **79,** மெசென்ஜர் வீதி, கொழும்பு-**12.**

தொலைபேசி: **36063.**

ஸ்ரீ பார்வதி அச்சகம், 288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.